அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 13/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1989, மார்ச் 7 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

**60 வயதை அடைவதன் பேரில் ஓய்வுபெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பளஏற்றக் கொடுப்பனவு வழங்குதல்.**

60 வயதை அடைவதன் பேரில் சேவையிலிருந்து ஓய்வு பெறுபவரும் தமது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சச் சம்பளப் படிநிலையை அடையாதவருமான அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் விடயத்தில் அவரினால் சம்பாதிக்கப்பட்ட சம்பள ஏற்றத்தை (இறுதிச் சம்பள ஏற்றத் தேதியிலிருந்து ஓய்வுபெறும் தேதிக்கு முந்திய நாள் வரைக்கும் வருமதியாகவுள்ள சம்பள ஏற்றத்தின் பகுதியை) அவருடைய வேலை, நடவடிக்கை, வரவு ஆகியன திருப்திகரமானவையாகவிருக்குமிடத்து, ஓய்வூதியத்தைக் கணிக்கும் நோக்கங்களுக்காக, அவர் இறுதியாகப் பெற்ற சம்பளத்துடன் சேர்த்துக் கொள்வதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

ஒப்பம்: சிறில் கமகே.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.